**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்:** 369 **நாள்:** 10.08.2026

**பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து மாநகராட்சி இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து மாநகராட்சி இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.08.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இணை ஆணையாளர் அவர்கள், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தினைப் பார்வையிட்டு, அங்கு செயல்பட்டு வரும் இ-சேவை மையத்தில் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அங்கு மனு அளிக்க வருகைத் தரும் மக்களிடம் கலந்துரையாடி, மக்களுக்கான தேவைகளை விரைந்து வழங்கிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, வியாசர்பாடியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் கலை கல்லூரியில் நிர்வாகக் கட்டடம், கலையரங்கம், நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையம், கிரிக்கெட் பயிற்சி வலை, கைப்பந்து உள்ளிட்ட ஒருங்கிணைந்த விளையாட்டு வசதிகள் அமைப்பது குறித்துப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், பிவி காலனியில் உள்ள காலி இடத்தினைப் பார்வையிட்டு, அங்கு பொதுமக்களுக்கு பயன்படும் வகையிலான கட்டடங்கள் கட்டுவது தொடர்பாகவும், வார்டு-46க்குட்பட்ட குட் செட் குளத்தில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாகவும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ச்சியாக, வார்டு-37க்குட்பட்ட சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலையில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் முல்லை மற்றும் வசந்தம் காம்ப்ளெக்ஸ் அடுக்குமாடி குடியிருப் கட்டடம் சிதிலமடைந்துள்ளதைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு,

வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாடாக விபத்துகள் ஏற்படாமல் இருக்க தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., மண்டல அலுவலர் திரு.ராஜ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**